[1980 பிப்ரவரி 7

இணைப்பு–V

[......18ம் பக்கத்திலுள்ள உடுகுறியிட்ட வினா எண் 87க்கான விடையைக் காண்க]

(அ) ஆம்

(ஆ) (i) காணாமல் போகும் மீனவர்களைத் தேடிக்கண்டு பிடித்து காப்பாற்றவும், தமிழ்நாடு கடற்கரையில் கட்டுமர மீனவர்களுக்கும், விசைபடகோட்டிகளுக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்படும் பகுதிகளை ரோந்து செய்யவும், மீனளத் துறையில் பிடிபடாமல் தப்பி மீன் பிடிக்கும் விசைப்படகுகளைத் தேடவும் ஒரு காப்பாற்றும் படை ஏற்படுத்த ரூ 10 இலட்சம் விலையில் அதிக திறனுள்ள இயந்திரங்களும் நவீன சாதனங்களும் பொருத்தப்பட்ட 43½ அடி நீளமுள்ள இரண்டு படகுகளை மீளனத் துறை வாங்க உத்தேசித்துள்ளது,

(ii) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மீனவர்களுக்கு படகுகள் வழங்குவதில் அவர்களின் தேவைகளை முழுவதும் பூர்த்தி செய்யும் பொருட்டு, படகுகள் கட்டுவதோடன்றி வெளியிலிருந்தும் படகுகள் வாங்க உத்தேசித்துள்ளது. இக்கழகம் படகு கட்டும் மீனவர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து ரூ. 10 இலட்சம் விலையில் 32 அடி நீளமுள்ள இரண்டு படகு கூடுகளை வாங்கும். புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 50 சதவீதம் மானியம், என்ற அடிப்படையில் இயங்கும் இயந்திரத்துடன் வழங்க ரூ. 2.20 இலட்சம் விலையில் 18 அடி நீளமுள்ள இருபது கண்ணாடியிழை படகுகளை பரிசோதனைக்காக வாங்க முடிவெடுத்துள்ளது. கண்ணாடியிழை படகுகள் திருப்தியான முறையில் செயல்பட்டால், மீனவர்களுக்கு வழங்க இன்னும் அதிக அளவில் அவ்வித படகுகளை கழகம் வாங்குவதாக இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS